ஆண்டிப்பட்டி தொகுதிக்குட்பட்ட, கன்னியப்பாபிள்ளைபட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் Rajiv Gandhi Khel Abhiyan என்ற திட்டத்தின்மூலம் உள்கட்டமைப்பும், வெளி விளையாட்டு மைதானமும் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதமுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நாங்கள் கொடுத்துள்ள. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள். நான் பிறகு சொல்கிறேன். பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிக்கை அளிக்க அனுமதி கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) பிறகு பேசலாம்.*

4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) புதிய வருவாய் வட்டங்கள், கோட்டங்கள் உருவாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

2015 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துத் துறைகளுக்கும் தாய்த் துறையாகக் கருதப்படுவதும், அரசின் சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முக்கியக் கருவியாக விளங்குவதும், நிருவாகத்தின் அச்சாணியாக விளங்குவதும், கட்டுக்கோப்பான சமுதாய முன்னேற்றத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றுவதும், பொதுமக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்ததுமான வருவாய்த் துறையின் சேவைகள், மக்களை விரைந்து சென்றடைய வேண்டும் என்ற நோக்கில், கடந்த நான்கு ஆண்டுகளாக வருவாய்த் துறையை வலுப்படுத்தும் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு தீட்டி, செயல்படுத்தி வருகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

வருவாய்த் துறையின் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்தும் விதமாக, நடப்பாண்டில் பின்வரும் திட்டங்களை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்:

1. வருவாய்த் துறையின் சேவை மக்களுக்கு விரைந்து கிடைத்திடும்வகையில், கடந்த நான்காண்டுகளில் 4 புதிய கோட்டங்களும், 49 புதிய வட்டங்களும், 59 குறு வட்டங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில், திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள திருவண்ணாமலை வட்டத்தைப் பிரித்து, கீழ்ப்பெண்ணாத்தூரில் புதிய வட்டமும்; விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி மற்றும் திருக்கோவிலூர் வட்டங்களைப் பிரித்து முறையே மேல்மலையனூர் மற்றும் கண்டாச்சிபுரம் ஆகிய இரு புதிய வட்டங்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ஓசூர் வட்டத்தைப் பிரித்து சூளகிரியில் ஒரு புதிய வட்டமும்; தருமபுரி மாவட்டத்திலுள்ள பாலக்கோடு, அரூர் ஆகிய வட்டங்களைச் சீரமைத்து காரிமங்கலத்தில் ஒரு புதிய வட்டமும், தருமபுரி வட்டத்தைப் பிரித்து நல்லம்பள்ளியில் ஒரு புதிய வட்டமும், சேலம் மாவட்டத்திலுள்ள ஓமலூர் வட்டத்தைப் பிரித்து, காடையாம்பட்டியில் ஒரு புதிய வட்டமும், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஆலந்தூர் மற்றும் திருப்பெரும்புதூர் ஆகிய வட்டங்களைச் சீரமைத்து பல்லாவரத்தில் ஒரு புதிய வட்டமும், வேலூர் மாவட்டத்திலுள்ள அரக்கோணம் மற்றும் குடியாத்தம் வட்டங்களைப் பிரித்து முறையே நெமிலி மற்றும் பேரணாம்பட்டு ஆகிய இரு புதிய வட்டங்களும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருநெல்வேலி மற்றும் அம்பாசமுத்திரம் ஆகிய இரு வட்டங்களைப் பிரித்து, முறையே மானூர் மற்றும் சேரன்மகாதேவி

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2015 ஆகஸ்ட் 31

ஆகிய இரு புதிய வட்டங்களும், நாமக்கல் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோடு வட்டத்தைப் பிரித்து கொமாரபாளையத்தில் ஒரு புதிய வட்டமும், ஈரோடு மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலம் வட்டத்தைப் பிரித்து தாளவாடியில் ஒரு புதிய வட்டமும், ஈரோடு வட்டத்தினைப் பிரித்து கொடுமுடி, மொடக்குறிச்சி ஆகிய இரு புதிய வட்டங்களும்; என மொத்தம் 16 புதிய வட்டங்கள், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) 16 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் 269 வட்டங்களின் எண்ணிக்கை 285 வட்டங்களாக அதிகரிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–05

2. இதேபோன்று, கடந்த நான்காண்டுகளில் நான்கு புதிய வருவாய்க் கோட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. சென்னை மாவட்டத்தில் வருவாய்க் கோட்டங்கள் எதுவுமில்லை. எனவே, நடப்பாண்டில் சென்னை மாவட்டத்தில், எழும்பூர் மற்றும் தண்டையார்பேட்டை என்ற இரு புதிய வருவாய்க் கோட்டங்களும்; மதுரை மாவட்டத்திலுள்ள மதுரை கோட்டத்தினைப் பிரித்து மேலூரில் ஒரு புதிய வருவாய்க் கோட்டமும்; (மேசையைத் தட்டும் ஒலி) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கோயம்புத்தூர் கோட்டத்தைப் பிரித்து கோயம்புத்தூர் (வடக்கு) என்ற ஒரு புதிய வருவாய்க் கோட்டமும்; (மேசையைத் தட்டும் ஒலி) விருதுநகர் மாவட்டத்திலுள்ள சிவகாசி கோட்டத்தைப் பிரித்து சாத்தூரில் ஒரு புதிய வருவாய்க் கோட்டமும் (மேசையைத் தட்டும் ஒலி) என மொத்தம் 5 வருவாய்க் கோட்டங்கள் 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் வருவாய்க் கோட்டங்களின் எண்ணிக்கை 80–லிருந்து 85 ஆக உயரும். (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தம் 17 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தவிருக்கும் மேற்கண்ட அறிவிப்புகளின்மூலம் பொதுமக்களுக்கு வருவாய்த் துறையினரின் சேவை விரைந்து கிடைக்கவும், வருவாய்த் துறையினர் தங்கள் சேவையை எளிதாகவும், விரைவாகவும், திறம்படவும் பொதுமக்களுக்கு ஆற்றவும் வழிபிறக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)